DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | S.C.No. 304/2020 |
| Deposition of witness for | .. P.W.1 |
| Name | திரு. லாரன்ஸ் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2022

முதல் விசாரணை

நான் தற்போது தெர்மல் பெந்தேயகோஸ் சபையில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன். 2016 ஆம் வருடம் தூத்துக்குடி மில்லர்புரம் பெந்தேயகோஸ் சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். இவ்வழக்கில் இறந்துபோன கனகராஜ் என்பவர் தலைமை போதகராக இருந்தார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1ம் எதிரி டைட்டஸ், 2ம் எதிரி அன்டோ, 3ம் எதிரி ரகு ஆகியோர்களை தெரியும். 4ம் எதிரி ஜான் தாமஸ் இறந்துபோய்விட்டார். கனகராஜிடம் உதவியாளராக இருந்தேன். அவருக்கு உணவு கொடுப்பது, மற்றும் அவரை பராமரிப்பது என்னுடைய கடமை. 2016 ஆம் வருடம் இரும்புளி ஊரிலிருந்து, மில்லர்புரம் வந்தேன். அன்றிலிருந்து அவருக்கு நான் உதவியாக இருந்தேன். பாஸ்டர் கனகராஜ் எளிமையானவர். மதகோட்பாட்டில் மிகவும் கண்டிப்பாக இருப்பவர். அன்பானவரும் கூட. அவர் எளிமையான முறையில் இருந்ததால், ஏசி போட்டு படுக்காமல், இயற்கையோடு சேர்ந்து இருந்து வருபவர். அதுதான் அவரது வழக்கமாக இருந்தது. 04.10.2016 ஆம் தேதியன்று மில்லர்புரம் சபையில் மாதாந்திர ஊழியர் கூட்டம் நடந்தது. எங்கள் சபைக்கு கீழ் 22 கிளை சபைகள் உள்ளது. சுமார் 100 பேர் அந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். சபையில் உள்ள நன்றாக இருக்க வேண்டும். ஊழியம் சரியாக செய்யவிட்டாமல், புகார் வந்தால் அதுகுறித்து போதனைகள் தலைமை பாஸ்டர் செய்வார். ஊழியர்கள் நன்றாக ஊழியம் செய்தால்தான் ஊழியம் நன்றாக இருக்கும். அந்த ஊழியக்கூட்டத்தில், பாஸ்டர் கனகராஜ் பேசும்போது, நீங்கள் சரியாக செய்யவில்லை, ஜெபம் செய்யவில்லை என்று எனக்கு அநேக புகார் வருகிறது என்று சொன்னார். அவ்வாறு புகார் வரும்போது, அவர் அதிலிருந்து திருந்துவதற்காக நல்ல முறையில் ஊழியம் செய்வதற்காகவும், அப்படி ஒரு போதனை செய்வார். போதனை செய்யும்போது, 04.10.2016 ஆம் தேதி கோரம்பள்ளம் சபையில் 1ம் எதிரி டைட்டஸ் என்பவர் ஊழியம் செய்து

கொண்டிருந்தார். கோரம்பள்ளத்தில் ஊழியம் செய்யும்போது, அங்கு ஊழியம் செய்த சின்ன சகோதரி ஜெனிட்டா அவர்களின் சேலையையும், கையையும் பிடித்து இழுத்ததாகவும் தலைமை பாஸ்டர் கனகராஜ் என்பவருக்கு புகார் வந்தது. உடனே பாஸ்டர் கனகராஜ், டைட்டஸை பார்த்து மில்லர்புரம் தலைமையகத்துக்கு வந்துவிடு என்று கூறினார். அங்கு வரவழைத்து சிறு தண்டனைகள் வழங்கினார். என்ன தண்டனை என்றால், அங்கு அறைகளை பெருக்குதல், விறகு வெட்டுதல், தண்ணீர் பாய்ச்சுதல், இந்த தண்டனைகளை எல்லாம் அவர் திருந்துவதற்காக கொடுத்தார். அதனால் 1ம் எதிரி டைட்டஸ், பாஸ்டர் கனகராஜிடம் மன்னிப்பு கேட்டார். ஆனால் அவர் மன்னிக்கவில்லை. நீ திருந்தும் வரை வேலை செய்ய வேண்டும் என்று கூறினார். மற்ற வேலை செய்யாதவர்களை நீயும் சரியாக ஜெபம் செய்யாவிட்டால், 1ம் எதிரி டைட்டஸ் மாதிரி தண்டனைகளை அனுபவிக்க வேண்டிவரும் என கூறியதால், 1ம் எதிரி டைட்டஸ்க்கு இருதயம் கடினமாகிவிட்டது. அங்கிருந்த சின்ன பாஸ்டர் ஜான்தாமஸிடம் இந்த காரியத்தை சொல்லியும் இருக்கிறார். அதற்கு சின்ன பாஸ்டர் ஜான்தாமஸ், இவர் ஊழியம் செய்து இருக்கும் வரையில் இது இப்படிதான் இருக்கும். இவர் இல்லாமல் இருந்தால்தான் ஊழியம் நன்றாக நடைபெறும் இப்படியாக பேசிக்கொண்டிருந்தனர். 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று நானும், சின்ன பாஸ்டர் அறைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு 1ம் எதிரி டைட்டஸ் உடன் சின்ன பாஸ்டர் பேசிக்கொண்டிருந்தார். நான் சென்றவுடனேயே பேச்சை நிறுத்தி விட்டார்கள். 04.10.2016 அன்று ஊழியக்காரர் கூட்டம் என்பதால் அவர் பெரும்பாலும் காலையில் சாப்பிடுவதில்லை. ஒரு லைம் டீ குடிப்பார். எனர்ஜிக்காக ஜஸ்டர்ஜன் எனர்ஜி பானம் குடிப்பார். இந்த கூட்டமானது 10.30 மணியிலிருந்து 2.45 மணி வரை நடைபெற்றது. மதியம் பாஸ்டர் எதுவும் சாப்பிடவில்லை. கூட்டத்தில் தீர்க்கதரிசனம் என்ற ஒரு வார்த்தை வந்தது. அந்த வார்த்தையானது அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும், தன் பிடறியை கடினப்படுத்துகிறது, சகாயமின்றி சடுதியில் நாசமடைவான் என்ற வார்த்தை வந்ததால் தம்முடைய இருதயம் கடினப்படக்கூடாது, அதேபோல இந்த வார்த்தை குறித்து, அவர் போதனை செய்தவுடன், அங்கிருந்த சிலர் பாஸ்டர் ஜான்தாமஸ், 1ம் எதிரி டைட்டஸ், விளாத்திகுளம் சபை ஊழியர் ராஜ், ரோஜ் காலனியை சபையை சேர்ந்த சொர்ணராஜ், குளத்தூர் சபை ஊழியர் ஜக்கப் ஆகியோர்கள் இவர் பேச்சை கேட்டு அங்கிருந்து வெளியே சென்றுவிட்டனர். அப்போது பாஸ்டர் கனராஜ் , நான் சொன்ன வார்த்தைகள் சிலருக்கு பிடிக்கவில்லை. அவர்களது இருதயம் குத்தப்பட்டு வெளியே சென்றுவிட்டார்கள். அவர்களை கூட்டி வா என்று என்னையும், பிரபுஜானையும் சொன்னார். நானும், பிரபுஜானும் போய் சென்று அழைத்து வந்தோம். சுமார் 2.45 மணியளவில் கூட்டம் முடிந்துவிட்டது. அப்போது எல்லா ஊழியர்களும் சாப்பிட போய்விட்டார்கள். எல்லா ஊழியர்களும் போகும்போது, பாஸ்டர் கனகராஜிடம் ஆசீர்வாதம் வாங்கிவிட்டுதான் செல்வது வழக்கம். 100 பேர் கலந்து கொண்ட ஊழியக்காரர்களை அனுப்புவதால் அவர் மதியம் சாப்பிடவில்லை. குடிக்க லைம்

டீ குடித்தார், எனர்ஜிக்காக ஜஸ்டர்ஜன் எனர்ஜி பானம் குடித்தார். சுமார் 6.00 மணியளவில் குளத்தூரில் ஊழியம் செய்து கொண்டிருந்த ஜேக்கப், பாஸ்டரிடம் நீங்கள் முன்னாள் நன்றாக இருந்தீர்கள். இப்போது சிஸ்டர்ஸ் பேச்சை கேட்டு நடந்து கொள்கிறீர்கள். அடிக்கடி இது என்ன மாமியார் வீடா என கேட்கிறீர்கள். இருவரும் பேசிக்கொண்டு சமாதானமாகி, ஜேக்கப் 7.00 மணியளவில் சென்றுவிட்டார். அன்று இரவு 8.00 மணியளவில் சாப்பாடு வாங்கி வரட்டுமா என கேட்டேன். நீ வாங்கிவா, நான் குளித்துவிட்டு வந்து சாப்பிடுகிறேன் என்று சொல்லிவிட்டார். அந்த சாப்பாட்டில் மீன்குளம்பு, கீரை, பாயாசம், பழங்கள் திராட்சை, ஆப்பிள், ஆரஞ்சு ஆகியவைகள் கொண்டு வைத்தேன். அவர் குளித்துவிட்டு வந்து, வெளியில் இருந்ததை எடுத்து சுமார் 9.45 மணியளவில் சாப்பிட்டுவிட்டு, டிரெயை என்னிடம் கொடுத்தார். அப்போது பாஸ்டரிடம் இரவு சாப்பாடு வேண்டுமா என கேட்டேன். அதற்கு அவர் வயிறு சரியில்லைடா, இரவிற்கு கஞ்சியும், சம்பலும், வெந்நீரும் வாங்கி வைத்துக்கொள் என்று சொன்னார். நானும் அதனை வாங்கி வைத்தேன். மேலே மாடியில் போய் படுக்க போகிறேன். அந்த மாடியானது தென்னை கிடுகு போட்டிருக்கும். நீ, போய் படுக்க ரெடி பண்ணு என்று சொன்னார். அங்கு கட்டில் மற்றும் கொசுவலைகளை சரி செய்து வைத்துவிட்டு, வந்து சொன்னேன். எங்களுக்கு இரவு 10.00 மணிமுதல் 11.00 மணி வரை இரவு ஸ்தோத்திர ஜெபம் நடக்கும். அந்த ஜெபத்திற்கு எல்லோரும் செல்லும்படி கூறிவிட்டார். அவ்வாறு அவர் வெளியே வந்து சொல்லும்போது, லுங்கியை மடித்து கட்டியிருந்தார். ஜிப்பாவிற்கு மேல், வெள்ளை நிறத்தில், பேச்சை நிற பூப்போட்ட துண்டு போட்டியிருந்தார். இரவு 11.00 மணியளவில் ஜெபம் முடிந்து, பிரபு ஜான், டைட்டஸ்(1ம் எதிரி), ராஜதுரை, பெஞ்சமின், காலேப், மற்றும் நானும் வந்தோம். எங்கள் சபையில் 3 கேட்டுகள் உண்டு. அந்த கேட்டுக்களை இரவு பூட்டிவிட்டுதான் தூங்க செல்வோம். அந்த கேட்டை பூட்டுவதற்கு நானும், பிரபுஜானும் சென்றோம். முதலில் 2 கேட்டுகளை பூட்டிவிட்டு, பின்னால் உள்ள கேட்டினை பூட்ட போகும்போது, அப்போது டைட்டஸ்(1ம் எதிரி) நின்று கொண்டிருந்தார். நான் பூட்டிக்கொள்கிறேன் என்று சொன்னார். அப்போது அவருடன் அன்டோ(2ம் எதிரி), கூட ஒரு நபரும் நின்று கொண்டிருந்தார். நாங்கள் சாவியை கொடுத்துவிட்டு, எங்கள் அறையில் படுக்க வந்துவிட்டோம். 05.10.2016 அதிகாலை 4.00 மணிக்கு ஸ்தோத்திர ஜெபம் நடந்தது. அந்த கூட்டத்தை சின்ன பாஸ்டர் நடத்தி கொண்டிருந்தார். பெரிய பாஸ்டர் கூட்டம் நடத்த வரவில்லை. அப்போது சின்ன பாஸ்டர் என்னிடம் ஜேம்ஸ் மேலே படுத்திருக்கிறானா என்று கேட்டார். நான் சென்று பார்த்துவிட்டு வந்து அவர் தூங்கி கொண்டிருக்கிறார் என்று சொன்னேன். கூட்டம் 5.00 மணிக்கு முடிந்தது. அப்போது டைட்டஸ்(1ம் எதிரி), பெஞ்சமினும், வராண்டாவை பெருக்கி கொண்டிருந்தார்கள். மூத்தவர்கள் பெருக்கி கொண்டிருந்ததால், நானும் சேர்ந்து பெருக்கினேன். டைட்டஸ்(1ம் எதிரி), பெஞ்சமினும், டீக்குடிப்பதற்கு சென்றுவிட்டார்கள். அன்று புதன்கிழமை என்பதால், வழக்கம்தோறும், புதன்கிழமை காலை வராண்டாவை சுத்தம் செய்யவேண்டும்

என்று காலையில் 6.00 மணிக்கு கனகராஜ் பாஸ்டர் பெல் அடிப்பார். ஆனால் அன்று பெல் அடிக்கவில்லை. மணி 6.15 மணியிலிருந்து ஏன்ற அடிக்கவில்லை என நினைத்து, அவர் சாப்பாட்டு அறைக்கு சென்று பார்த்தேன். நான் இரவு வைத்த கஞ்சி குடிக்காமல் இருந்தது. தண்ணீரும் குடிக்காமல் அப்படியே இருந்தது. ரூம் பூட்டப்பட்டிருந்ததால், நான் அவர் படுத்திருந்த மாடிக்கு சென்று பார்த்தேன். பார்த்தபோது, பாஸ்டர், பாஸ்டர் என்று கூப்பிட்டேன், அவர் சத்தம் தரவில்லை, அருகில் சென்று பார்த்தபோது, அவர் வாயிலிருந்து இரத்தம் வந்து, தலையணைபுறம் பட்டு இருந்தது. நான் பார்க்கும்போது, இரவு போட்டிருந்த டிரஸ் போடாமல், வேறு லுங்கி மாற்றப்பட்டு, வேறு டிரஸ் போடப்பட்டு மடங்காமல் அப்படியே இருந்தது. வழக்கம்போல் படுத்திருப்பதற்கான அடையாளங்கள் அங்கு இல்லை. கொசுவலையை ஒருநாளும் மேலே தூக்கி கட்ட மாட்டார். அன்று கொசுவலை மேலே கட்டப்பட்டிருந்தது. பல்செட் மற்றும் மூக்குகண்ணாடியை படுக்கைக்கு கொண்டு செல்லமாட்டார். ஆனால் அன்று கொண்டு செல்லப்பட்டிருந்தது. இது எல்லாம் எனக்கு சந்தேகமாக இருந்தது. உடனே நான் அழுதுகொண்டு, மேலே படுத்துக்கொண்டிருந்த பிரபுஜானை கூப்பிட்டு அழைத்தேன். பிரபுஜான் வா, பாஸ்டரின் வாயிலிருந்து இரத்தம் வருகிறது என்று சொன்னேன். உடனே அவரும் வந்தார். அவர் மேலே வந்து பார்த்தார். பாஸ்டர் கனராஜின் வலது கை, அவரது தலையின்மேல் இருந்தது. அவரது இடது கை மார்பில் இருந்தது. இடது கன்னத்தின் கீழ் நாடியில் காயங்கள் இருந்தது. இதை எல்லாம் பார்த்துவிட்டு, சின்ன பாஸ்டரை கூட்டி வா என்று என்னிடம் சொன்னார். பாஸ்டர் கை எல்லாம் குளிர்ந்து போய் இருக்கிறது என்று சொன்னார். நான் சின்ன பாஸ்டரை போய் கூப்பிட போனேன். 2,3 தடவை கூப்பிட்டேன் சத்தம் கொடுக்கவில்லை. மறுபடியும் கூப்பிட்டேன். என்னவென்று கேட்டார். நான் பாஸ்டர் வாயிலிருந்து இரத்தம் வருகிறது என்று சொன்னேன். உடனே எல்லா பிரதஸ்–ம் அந்த மாடிக்கு வந்தார்கள். அப்போது பாஸ்டர் ஜான்தாமஸ் அவர் பார்த்தபிறகு, ஏதோ ஹார்ட் அட்டாக் போல என்று நினைத்து, பக்கத்தில் டாக்டர் போஸ்வெல்லுக்கு போன் அடித்தார். அவர் போன் எடுக்கவில்லை. உடனே ஜான்ஜோசப் அவரை போய் அழைத்துவிட்டு வா என்று சொன்னார். அவரும் வந்து பார்த்துவிட்டு, இது ஏதோ ஹார்ட் அட்டாக் போல என்று சொல்லிவிட்டார். அப்போது கனகராஜ் பாஸ்டரின் மரணம் ஹார்ட் அட்டாக் என்று அறிவித்தார். அங்கிருந்து அடக்கம் செய்வதற்கான வேலைகளை செய்யுங்கள் பாஸ்டர் ஜான்தாமஸ் எங்களிடம் சொன்னார். பாஸ்டர் கனகராஜ் உறவினர் போன் நம்பர் இருக்கிறதா என்று கேட்டார். உடனே போய் பார்த்து பாஸ்டர் இறந்துவிட்டார் என்ற செய்தியை அவரது உறவினர்களிடம் சொன்னார்கள். அடக்கத்திற்காக அவர் பாடியை தூக்கும்போது, அவர் தலையணையில் அவருடைய ரூமின் சாவி இருந்தது. அதை பாஸ்டர் ஜான்தாமஸ் கையில் எடுத்து வைத்து கொண்டார். அங்கு மேலும் எல்லா ஊழியர்களும் வந்தார்கள். பாஸ்டரின் உடலை கழுவுவதற்காக, பிரதர் டைட்டஸ்(1ம் எதிரி), சொர்ணராஜ் ஆகியோர்கள் ஓஸை எடுத்துக்கொண்டு தண்ணீரை பீய்ச்சி எடுத்து இறந்த பாஸ்டரின் உடலையும்,

தரையையும் கழுவி கொண்டிருந்தார்கள். நீ போய் கீழே சென்று மீட்டிங் ஹாலை ரெடி பண்ணு என்று சொன்னார்கள். அதன் பிறகு உடலை கீழே கொண்டு வந்தார்கள். அப்போது ஜான் தாமஸ் பாஸ்டர் அவரிடமிருந்த சாவியை ஜான் ஜோசப்பிடம், அடக்கத்திற்கு பணம் தேவைப்படுவதாக சொல்லி, கட்டிலிலிருந்த பணத்தை எல்லாம் எடுத்து வாருங்கள் என்று சொன்னார். அந்த பணத்தை, ஒரு பையில் எடுத்துக்கொண்டு கொடுத்துவிட்டோம். 05.10.2016 ஆம் தேதி இறந்த பாஸ்டர் கனகராஜின் உறவினர்கள் வந்துவிட்டார்கள். பாஸ்டரின் உடலை பார்த்தார்கள். அவரது மரணத்தில் சந்தேகமாக இருப்பதை சொல்லி, கன்னம் மற்றும் நாடியிலிருந்த காயங்களை பார்த்துவிட்டு, சின்ன பாஸ்டர் ஜான் தாமஸிடம் கேட்டார். இயற்கை மரணத்திற்கு அப்பால், கொலையாக உள்ளதாக சொல்லி கேட்டார். 06.10.2016 அன்று அடக்க ஆராதனை நடந்து கொண்டிருந்தது. வந்திருந்த உறவினர்கள், பாஸ்டர் உடலை அடக்கம் செய்ய விடமாட்டோம். எங்களுக்கு உண்மை தெரியவேண்டும் என பாஸ்டர் ஜான்தாமஸிடம்(இறந்த எதிரி) கேட்டார்கள். அதற்கு நீதான், அவரது சொந்தக்காரர் என்பதற்கு என்ன அத்தாட்சி என்று உறவினர் சுதர்சனம் என்பவரிடம் கேட்டார். மேலும் அவரது உறவினர் பார்த்தசாரதி என்பவர் அவரது அடையாள அட்டையை காண்பித்தார். உடனே அவர்கள் சிப்காட் காவல்நிலையத்திற்கு பாஸ்டர் கனகராஜ் மரணம் குறித்து புகார் செய்தார்கள். சிப்காட் போலீசார் வந்து, பார்த்து, பிரேதபரிசோதனை செய்ய வேண்டும் என சொன்னார்கள். உடனே பாஸ்டரின் உடல் தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. 07.10.2016 அன்று பாஸ்டருடைய பிரேத பரிசோதனைக்கு பிறகு, அடக்கம் செய்யப்பட்டது. பிரேத பரிசோதனையின்போது இது ஒரு கொலை என்று தெரிந்து கொண்டோம். 08.10.2016 அன்று சிப்காட் போலீசார்கள் விசாரித்தார்கள். 14.12.2017 ஆம் தேதியன்று நாசரேத் ஊழியம் செய்துகொண்டிருந்த பாஸ்டர் ஆசிர் என்பவர் எங்கள் சபையின் தலைமை பொறுப்பாளராக இருந்த பாஸ்டர் செல்வபாண்டியிடம், போன் செய்து டைட்டஸ் (1ம் எதிரி) செல்வபாண்டி பாஸ்டரிடம் பேச வேண்டும் என கூறியதாகவும், உடனே அங்கிருந்த ஊழியக்காரர் ராஜதுரையும், ராபினும், நாசரேத்திலிருந்து டைட்ஸை (1ம் எதிரி) தூத்துக்குடி மில்லர்புரம் சபைக்கு கூட்டி வந்தார்கள். பாஸ்டர் செல்வபாண்டி அறையில் வைத்து டைட்டஸ் (1ம் எதிரி) உள்ளே போனார். சுமார் 1 மணிநேரம் கழித்து வெளியே வந்தார். அறையில் ஊழியக்காரர் ராஜதுரையும் இருந்தார். உடனே ராஜதுரையை பார்த்து வண்டியை எடு, சிப்காட் காவல்நிலையம் செல்ல வேண்டுமென சொன்னார். சிப்காட் காவல்நிலையத்திற்கு டைட்டஸ்(1ம் எதிரி) கூட்டி சென்றனர். பாஸ்டர் செல்வபாண்டி, தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் எனவும், அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவன் இரக்கம் பெறுவான் என சொல்லி, பாஸ்டர் கனகராஜை, அன்டோ(2ம் எதிரி) , டைட்டஸ்(1ம் எதிரி), ரகு(3ம் எதிரி), ஜான் தாமஸ் (இறந்த எதிரி) ஆகியோர்கள் கொலை செய்ததாகவும், எனக்கு ஒரு இரக்கம் கிடைக்க வேண்டும் என வாக்குமூலம் கொடுத்ததாகவும், எல்லா ஊழியர்களிடமும் சொன்னார். இதன்

நிமித்தம் டைட்டஸ்(1ம் எதிரி)தான், பாஸ்டர் கனகராஜை கொலை செய்திருப்பார் என்று தெரிந்து கொண்டோம். 15.12.2017 அன்று சிப்காட் காவல்நிலையத்தில் என்னை அழைத்தார்கள். 04.10.2016 அன்று அவர் போட்டிருந்த துண்டை காட்டி என்னிடம் காட்டினார்கள். அது 04.10.2016 ஆம் தேதி பாஸ்டர் கனகராஜ் போட்டிருந்ததுதான் என்று அடையாளம் காட்டினேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம் நீதித்துறை நடுவர் எண்.2, தூத்துக்குடி அவர்கள் முன்னிலையில் நான் கொடுத்த வாக்குமூலம். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் அ.சா.ஆ–1. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற வெள்ளை கலரில் பச்சை கலர் டிசைன் போட்ட பூப்போட்ட துண்டுதான்( சொத்துப்பட்டியலில் வரிசை எண்.4ல் உள்ளது) 04.10.2016 ஆம் தேதியன்று பாஸ்டர் கனகராஜ் என்பவர் பயன்படுத்தியதாகும் அது சா.பொ.1, பாஸ்டர் படுத்திருந்த ரூமிலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டினால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற இரத்தக்கறை படிந்த ஊதா நிறத்தில் பூ டிசைன் போட்ட தலையணை ஒன்று, வெள்ளை நிற தலையணை உறையுடன் உள்ளது. (சொத்துப்பட்டியலில் வரிசை எண்.7ல் உள்ளது) 04.10.2016 ஆம் தேதியன்று பாஸ்டர் கனகராஜ் என்பவர் படுத்திருந்த மாடியில் அவர் பயன்படுத்தியதாகும் அது சா.பொ.2, என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற வெள்ளை கலரில் ஊதா பூப்போட்ட பெட்ஷீட் ஒன்று, இரத்தக்கறையுடன் கூடியது (சொத்துப்பட்டியலில் வரிசை எண்.8ல் உள்ளது) 04.10.2016 ஆம் தேதியன்று பாஸ்டர் கனகராஜ் என்பவர் படுத்திருந்த மாடியில் அவர் பயன்படுத்தியதாகும் அது சா.பொ.3, என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற ஓலை பாய் ஒன்று, அதன் ஓரத்தில் ஊதாகலர் துணியால் கறைத்தக்கப்பட்டுள்ளது. இரத்தக்கறையுடன் கூடியது (சொத்துப்பட்டியலில் வரிசை எண்.9ல் உள்ளது) 04.10.2016 ஆம் தேதியன்று பாஸ்டர் கனகராஜ் என்பவர் படுத்திருந்த மாடியில் அவர் பயன்படுத்தியதாகும் அது சா.பொ.4, என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற பிளாஸ்டிக் டேப்பால் பின்னப்பட்ட இரும்பு பைப் கட்டில் ஒன்று, பச்சை, ரோஸ் கலர் டிசைன் போடப்பட்டுள்ளது. (சொத்துப்பட்டியலில் வரிசை எண்.10ல் உள்ளது) 04.10.2016 ஆம் தேதியன்று பாஸ்டர் கனகராஜ் என்பவர் படுத்திருந்த மாடியில் அவர் பயன்படுத்தியதாகும் அது சா.பொ.5, என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகின்ற கொசு வலை ஒன்று, ஓரத்தில் மஞ்சள் கலர் துணியால் விளிம்பில் தைக்கப்பட்டுள்ளது. (சொத்துப்பட்டியலில் வரிசை எண்.11ல் உள்ளது) 04.10.2016 ஆம் தேதியன்று பாஸ்டர் கனகராஜ் என்பவர் படுத்திருந்த மாடியில் அவர் பயன்படுத்தியதாகும் அது சா.பொ.6, இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

நான் 2014ல் மில்லர்புரம் பெந்தெயகோஸ்தே சபைக்கு முதல்முதலாக வந்தேன். இந்த சபைக்கு வருவதற்கு முன்பு இரும்புலியூரில் பயிற்சி எடுத்திருந்தேன். சம்பவம் நடந்த மில்லர்புரம் சபையில் வழக்கமாக மக்கள் கூட்டம் அதிகமாக இருக்குமா என்றால் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும்

ஆராதனை நடக்கும். அங்கு அதிகமான கூட்டம் இருக்கும். மில்லர்புரம் சபையில் மட்டும் சுமார் 400 பேர்கள் வருவார்கள். அந்த சபையில் உள்ளே வேலை பார்ப்பவர்கள் தங்குவதற்கும், வெளியில் இருந்து வருவபவர்கள் தங்குவதற்கும் இடங்கள் நிறைய உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன பாஸ்டர் தங்குவதற்கு ஏசி வைத்து நல்ல வசதிப்படைத்த அறை என்றால் சரிதான். அதேமாதிரி 2 வது பாஸ்டர் ஜான் தாமஸ்(4 ம் எதிரி) அது போன்ற அறை உள்ளதா என்றால் அந்த மாதிரி அறை கிடையாது. என்னைபோல பாதருக்கு பணிவிடை செய்பவர்கள் பொதுவாக எத்தனை பேர் என்றால் 2014 ஆம் ஆண்டில் யார் புதியதாக வருபவர்கள் பணிவிடை செய்யவேண்டும். ஒவ்வொரு வருடமும் ஒரு பிரதர், 2 சிஸ்டர் (2 பெண்கள்) வருவார்கள். அதில் ஒரு பிரதர் மட்டும், பெரிய பாதருக்கு பணிவிடை செய்வார்கள். 2014 ஆம் ஆண்டு நான் வந்த காலகட்டத்தில் பெண்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஊழியம் செய்யும் பெண்களுக்கென்று தனி அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. 25 லிருந்து 30 பெண்கள் அங்கே தங்கியிருப்பார்கள். ஊழியம் செய்யும் ஆண்கள் எத்தனை பேர்கள் அங்கு தங்கியிருப்பார்கள் என்றால் இறந்துபோன கனகராஜ் பாஸ்டர் அவருக்கு பிடித்த நபரை மட்டும் அங்கு தங்க வைப்பார். அங்கு தண்டனை பெற்றவர்களையும் தங்க வைப்பார்கள். சம்பவம் நடந்த கிழமை என்ன என்றால் செவ்வாய்கிழமை இரவு நடந்தது. செவ்வாய் கிழமையா, புதன்கிழமையா என்று சரியாக சொல்லமுடியாது. சம்பவம் என்று சொல்வதை நான் நேரில் பார்க்கவில்லை. 1ம் எதிரி டைட்டஸ்–டம் பேசி பழக்கம் உண்டு. ஏனென்றால் அவர் எங்களுடன் இருப்பதால், அவரிடம் நான் பேசி பழகி இருக்கிறேன். 2 ம் எதிரியிடம் நான் பேசியதில்லை. 1 ம் எதிரி டைட்டஸை, 2 ம் எதிரி பார்க்க வருவதால் எனக்கு தெரியும். 3 ம் எதிரியை நான் பார்த்ததில்லை. 3 ம் எதிரி, 2 ம் எதிரி அன்டோவுடன் வண்டியில் வரும்போது பார்த்திருக்கிறேன். 2 ம் எதிரி பெயர் அன்டோ என்று 1 ம் எதிரி டைட்டஸ் சொன்னார். 3 ம் எதிரி ரகு பெயர், ரகு என்று எப்போது தெரியும். வழக்கில் உள்ள சான்றுபொருளை, 15.12.2017 அன்று காவல்நிலையத்தில் வைத்து காண்பிக்கும்போதுதான் இவர் ரகு என்று காவல்துறையினர் சொன்னார்கள் என்றால் சரிதான். என்னுடைய முதல்விசாரணையில், பாதரை மாடியில் பார்க்க போனேன் என்றும், பாதரின் வாயில் இரத்தம் வந்தது , அழுகை வந்தது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விசயங்களை காவல்நிலையத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அப்போது சந்தேகம் வந்திருந்தால், அப்போதே காவல்நிலையத்திற்கு சென்று சொல்லியிருப்பேன் என்றும், எனக்கு சந்தேகம் இல்லை என்பதால் காவல்நிலையத்திற்கு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் சபையின் விதிப்படி ஊழியம் செய்கிறவர்கள், சீனியர்கள் என்ன சொல்லிக்கிறார்களோ அதைப்படிதான் சொல்லுவோம். எங்களுடைய சபையில் உள்ள பெரியவர்கள் இது சாதாரண இயற்கையான மரணம் என்று சொல்லியதால், அதனை ஏற்றுக்கொண்டு நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என்னுடைய அந்த சபையில், என்னைபோல் ஆண் ஊழியம் செய்கிறவர்கள், பெண் ஊழியர்களை தவிர,

வேறு யார் தங்குவார்கள் என்றால் ஜெபிக்க வருபவர்கள் தங்குவார்கள். 04.10.2016 அன்று இரவு, சபை ஊழியர்கள் தவிர, அந்த கட்டிடத்தில் யாரெல்லாம் தங்கியிருந்தார்கள் என்றால் மரியதாஸ், ஜேம்ஸ், அய்யாதுரை, யாக்கோபு, உகந்தகுமார், ரகு, பிரபு, பிரவீன் ஆகியோர்கள் தங்கியிருந்தார்கள். பிரபு, பிரவீன் ஆகியோர்கள் எங்கள் சபையின் ஊழியர்கள் அல்ல, விசுவாசிகளும் அல்ல என்றால் சரிதான். அவர்கள் என்னைபோன்று ஊழியம் செய்யக்கூடிய ஒருவருடைய விருந்தாளிகளாக வந்தவர்கள் என்றால் சரிதான். பிரபு, பிரவீன் ஆகியோர்கள் பிரபுஜான் என்ற ஊழியக்காரரின் உறவினர்கள் அல்ல. பிரபுஜான் என்பவருக்கு வேண்டப்பட்டவர்கள். 2014 ஆம் ஆண்டு நான் வந்தேன். 2015 ஆம் ஆண்டு பிரபுஜான் வந்தார். 2016 ஆம் ஆண்டு காலேப் என்பவர் வந்தார். சம்பவம் நடந்த 04.10.2016 அன்று 1ம் எதிரி டைட்டஸை தவிர, மற்ற நபர்கள் அந்த சபையில் உள்ள வளாகத்தில் எங்கும் தங்கவில்லை என்றால் சரிதான். 2014 ஆம் ஆண்டு வந்த நான், 2015 ஆம்ஆண்டு வந்த பிரபுஜானையும், 2016 ம் ஆண்டு வந்த காலேப்யும் தவிர்த்துவிட்டு, நான், இறந்துபோன பாஸ்டர் கனகராஜை நன்றாக கவனித்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். சக ஊழியக்காரர்கள் என்ன சொல்லிகிறார்கள் என்றால், 2015, 2016 ல் வந்தவர்களை விட்டுவிட்டு, நானே பாஸ்டர் கனகராஜை கவனித்து வந்ததால், சில நேரங்களில் கைகலப்பும், வாக்குவாதம் ஏற்பட்டதாக சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. 04.10.2016 க்கு 3 மாதங்களுக்கு முன் பிரபுஜானுக்கும் எனக்கும் கைகலப்பு ஏற்பட்டதாகவும், பிரபுஜானுக்கு ஆதரவாக 1 ம் எதிரி செயல்பட்டதாகவும், அதன்காரணமாக 1ம் எதிரிக்கும் எனக்கும் விரோதம் இருந்து வந்ததாகவும் சொன்னால் அது சரியல்ல. அதேபோன்று எனக்கும், பிரபுஜானுக்கும் நடைபெற்ற கைகலப்பு சம்மந்தமாகத்தான் பிரபுஜான், வெளியிலிருந்து 2 நபர்களை அழைத்து வந்ததாக சபையில் உள்ளவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரபுஜான் 2 பேரை அழைத்து வந்தது எதற்காக அழைத்து வந்தார் என்று எனக்கு தெரியாது. அந்த 2 பேரும் சம்பவம் நடக்கின்ற அன்று, சம்பவத்திற்கு மறுநாள், வெளியில் சென்று சாப்பாடு எல்லாம் சாப்பிட்டு வந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. சிப்காட் காவல்நிலையத்திற்கு சம்பவம் நடந்த பிறகு, முதல்முதலாக என்ன தேதியில் போனேன் என்றால் 08.10.2016 அன்று நான் சென்றேன். அன்று எத்தனை பேப்பரில் கையொப்பம் செய்தேன். நான் சொன்னேன் லேப்டாப்பில் டைப் செய்தார்கள். ஆனால் நான் கையெழுத்து போடவில்லை. அதன்பிறகு பலமுறை என்னை அழைத்து விசாரித்தார்கள். சுமார் 10, 15.முறை கூப்பிட்டு விசாரணை செய்தார்கள். ஒவ்வொரு முறையும் போகும்போது நான் கையெழுத்து போட்டேனா என்று ஞாபகம் இல்லை. கடைசியாக எப்போது கையெழுத்து போட்டேன் என்றால் 18.01.2018 அன்று சிப்காட் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்பட்ட காகிதம் எத்தனை பக்கங்கள் இருந்தது என்று என்னால் சொல்லமுடியாது. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு

தெரியாது. என்னுடைய சபையில் 2014 ஆம் ஆண்டு நான் வந்த நாள் முதல் இன்றுவரை தலைமை போதகராக, ஊழியர்க்காரர்கள், விசுவாசிகளோ, சகோரர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர்களில் எத்தனைபேர்கள் இறந்து போயிருப்பார்கள் என்றால் 20, 25 பேர்கள் இறந்து போயிருப்பார்கள். அவர்கள் அனைவரும் இறந்தது, வயோதிகத்தின் மூலமாகவும், வியாதிகளாலும் இறந்தவர்களும் உண்டு. என்னுடைய சபை விதிகளின்படி, சபை ஊழியர் ஒருவருக்கு வியாதிகள் இருந்தால் மருத்துவரை பார்க்க மாட்டோம், ஜெபம் மட்டும்தான் செய்வோம் என்றால் சரிதான். இறந்துபோனதாக சொல்லப்பட்ட கனகராஜ் பாதருக்கு அன்று இறக்கும்போது எனக்கு தெரிந்தவரையில் 60 முதல் 65 வயதிற்குள் இருக்கும். அவருக்கு என்ன வியாதிகள் எல்லாம் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அடிக்கடி வயிறு வலிப்பதாக சொல்வார். அவருக்கு ஏற்கனவே மூலம் வியாதி இருந்து சரியாகி விட்டது. வேறு உடல் குறைபாடு இருப்பதாக எனக்கு தெரியாது. அவருடைய அறையில் எப்போதும், உடலை சொரிவதற்கு ஒரு கம்புபோன்ற வைத்திருப்பார் என்றால் சரிதான். அந்த கம்பின் முனையில் மரத்தினால் ஆன கைபோன்று விரல்களுடன் கூடிய அமைப்பு இருக்கும் என்றால் சரிதான். இறந்துபோன கனகராஜ் பாதருக்கு தோல் சம்மந்தப்பட்ட வியாதி உண்டு என்றால் சரிதான். பல நேரங்களில், உடல்களில் கம்பு குச்சியை வைத்து சொரிவதன் மூலமாக உடலில் பல இடங்களில் இரத்தம் வருவதுண்டு. 04.10.2016 தேதிக்கு முன்பு, பாஸ்டர் கனகராஜ் என்றாவது மருத்துவமனைக்கு சென்றிருக்கிறாரா என்றால் எனக்கு தெரிந்து மருத்துவமனைக்கு போனதில்லை. எனக்கு தெரிந்த வரையிலும் அவரை பார்க்க மருத்துவர் எவரும் வந்ததில்லை. அதே போல் எங்கள் சபையின் முக்கியமான ஒழுங்கு என்னவென்றால் சபை ஊழியர்கள் யாரும் செல்போன் பயன்படுத்தக்கூடாது என்றால் சரிதான். பாஸ்டர்ஸ் அதாவது 25 ஆண்டுகள் ஊழியர்களாக பணியாற்றியவர்களுக்கு செல்போன் பயன்படுத்த அனுமதி உண்டு. நானும், 1ம்எதிரி டைட்டஸ்–ம் சம்பவ காலத்தில் 25 ஆண்டுகளுக்கு கீழ் ஊழியம் செய்தவர்கள் என்பதால் எங்கள் சபை விதியின்படி நாங்கள் இருவரும் செல்போன் பயன்படுத்த கூடாது என்றால் சரிதான். 1ம் எதிரி டைட்டஸ், எங்கள் கட்டிடத்தில் இருந்தபோது செல்போன் பயன்படுத்தியதாக எனக்கும் தெரியாது, சபையில் உள்ளவர்களும் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. 1ம் எதிரி டைட்டஸ் , ஒரு பெண் ஊழியருடன் தவறாக நடந்து கொண்டார் என்பது நேரடியாக எனக்கு தெரியாது, எனக்கு கேள்விப்பட்டுதான் தெரியவந்தது. நான், 08.07.2017 அன்று முதல்முதலில் காவல்நிலையம் சென்றபோது, 1ம் எதிரி டைட்டஸ் என்பவருக்கு பெண் ஊழியருடன் பிரச்சனை உள்ளதை பற்றி போலீசாரிடம் சொல்லியுள்ளேன். அவர்கள் அதனை பதிவு செய்துள்ளார்களா என்பதை நான் லேப்டாப்பை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை. மில்லர்புரம் சபையில் சம்பவத்தின்போது தங்கியிருந்த திரு. ரகு என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் ஆவார். அவரை பொதுவாக சங்கிலியால் கட்டி வைத்திருப்பார்கள் என்றால் நான் அவற்றை பார்த்ததில்லை. நான் கேள்விப்பட்டுள்ளேன். சம்பவத்தின்போது அவர் சங்கிலியால்

கட்டப்பட்டிருக்கவில்லை. அவர் சம்பவ காலங்களில், இரவு நேரங்களில் ஊளையிடுவது, கத்தி கூச்சல் போடுவது போன்றவற்றில் ஈடுபடுவார் என்றால் அது சரியல்ல. எனக்கு தெரிந்து அவ்வாறு அவர் நடந்து கொண்டதில்லை. ஏற்கனவே அவர் குணமாகிவிட்டார் என்று சாட்சி சொல்கிறார். அவரை சலூனுக்கு கூட்டி செல்லும்போது, பாஸ்டர் கனகராஜை அவர் தாக்கியுள்ளதாக, சபையில் உள்ளவர்கள் பேசினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இருந்தவரையில் அவ்வாறு நடந்ததாக எனக்கு தெரியவரவில்லை. 04.10.2016 அன்று நடந்த ஊழியர் கூட்டத்தில், ஒரு சிலர் பாஸ்டர் கனகராஜ் கடிந்து பேசியது, இருதயம் கனமானது என்று சொல்லியுள்ள நபர்களின் பெயரில் முதல்நாளில் 1ம் எதிரி டைட்டஸின் பெயரை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். ஆனால் அவர்கள் அதனை பதிவு செய்துள்ளார்களா என்பதை நான் பார்க்கவில்லை. 04.10.2016 அன்று ஊழியர் கூட்டத்தின்போது, முதலில் ஜான்தாமஸ், விளாத்திகுளம் ராஜ் பிரதர், 1ம் எதிரி டைட்டஸ், ரோஜ்காலனி சொர்ணராஜ், குளத்தூர் ஜேக்கப் ஆகியோர்கள் வெளியேறினார்கள். இந்த அனைவரின் பெயரையும் போலீசார் என்னை முதல்நாள் விசாரித்தபோதே சொல்லியுள்ளேன். அதேபோன்று பிரபுஜானுடன் வந்திருந்த 2பேரையும் பற்றி போலீசாரிடம் சொன்னேன். மனநிலை பாதிக்கப்பட்ட திரு. ரகு என்பவர் அங்கிருந்தார் என்று சொன்னேன். ஆனால் போலீசார் அதனை எழுதியதாக எனக்கு தெரியவில்லை. சம்பவதன்று காலையில் முதல்முதலில் பிணத்தை பார்த்தது நான்தான். 6.00யிலிருந்து, 7.00மணிக்குள்ளாக இருக்கும். அந்த இடம் நான் பார்க்கும்போது, அங்குள்ள பொருட்கள் எல்லாம் சிதறி கிடந்ததா என்றால் பொருட்கள் எல்லாம் வைத்த இடத்தில்தான் இருந்தது. பாஸ்டர் கனகராஜ் மட்டும் நிலைகுலைந்த நிலையில் படுத்திருந்தார். அதற்கு பின்புதான் மற்றவர்களை நான் அழைத்துவந்தேன். அவர்களுக்கு பிறகு மருத்துவர் வந்தார். மருத்துவருக்கு ஜான்தாமஸ் தகவல் சொன்னார். மருத்துவர் வந்து பரிசோதனை செய்யும்போது நான் அங்கிருந்தேன். மருத்துவர் பரிசோதனை செய்தவுடன், இது மாரடைப்பால் வந்த இறப்பு என்று சொன்னார் என்றால் சரிதான். அதற்கு பின்பு, அதே மருத்துவர், அந்த பாஸ்டர் கனகராஜ் என்பவரின் இறப்பு சாதாரண நெஞ்சுவலியால் வந்ததாக சான்று கொடுத்துள்ளார் என்றால் என்னிடம் கொடுக்கவில்லை, யாரிடம் கொடுத்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. இறந்துபோன பாஸ்டர் கனகராஜின் உறவினர்களுக்கு நான் தகவல் சொல்லவில்லை, ஆனால் அவர்களின் தொலைபேசி எண்களை நான்தான் வாங்கிகொடுத்தேன். தொலைபேசியில் தகவல் தெரிந்தவுடன் 05.10.2016 அன்று மாலையே வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். மாலையில், அவர்கள் எந்த புகாரும் கொடுக்க போகவில்லை என்றால் சரிதான். பாஸ்டர் கனகராஜின் அறையிலிருந்து அவர் இறந்துபோனபிறகு பல லட்சக்கணக்கான பணங்களை எடுத்ததாக சொல்லியுள்ளேன். அவ்வாறு பணங்களை எடுத்தபிறகுதான் புகார் கொடுப்பதற்கு காவல்நிலையம் போனார்கள். புகார்கொடுப்பதற்கு முன்பு, பாஸ்டர் ஜான்தாமஸிக்கும், பாஸ்டர் கனகராஜின் உறவினர்களுக்கும் பிரச்சனை வந்ததா என்றால் வந்தது. பாஸ்டர் கனகராஜின்

அறையில், குறிப்பிட்டு சொல்லமுடியாத அளவிற்கு பல லட்சம் ரூபாய் இருந்தது என்றும், அதில் இறந்துபோன பாஸ்டர் கனகராஜின் உறவினர்கள் பங்கு கேட்டதால் ஏற்பட்ட சண்டையின் காரணமாக சாதாரண, இயற்கையான மரணத்தை கொலை வழக்காக மாற்றிவிடுவதாக மிரட்டி, ஜான் தாமஸை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. அப்படி நடந்திருக்க வாய்ப்புண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அது பற்றி என்னால் சொல்ல இயலாது. பாஸ்டர் கனகராஜ் அறையிலிருந்து எடுக்கப்பட்ட தொகைகள் அனைத்தையும், ஜான் தாமஸ், 1ம் எதிரி டைட்டஸ், பெஞ்சமின் ஆகியோர்கள் எண்ணினார்கள், அதனை நான் பார்த்தேன். ஆனால் நான் அதில் கலந்து கொள்ளவில்லை. பாஸ்டர் கனராஜ் என்பவரின் அறையிலிருந்து எடுக்கப்பட்ட அந்த தொகைகள் அனைத்தும், சென்னையிலிருந்து வந்த, தலைமை அலுவலகத்திலிருந்து வந்த பாஸ்டர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன பாஸ்டர் கனகராஜை கீழே கொண்டுவதற்கு முன்பு, 1ம் எதிரி டைட்டஸ், சொர்ணராஜ் என்பவர்களும் கழுவினார்கள். அப்போது அதனை பார்த்து கொண்டிருந்த நான், பாஸ்டர் ஜான்தாமஸ் சொன்னதன்பேரில், கீழே உள்ள மீட்டிங் ஹாலில் இறந்துபோனவருடைய உடலை வைப்பதற்காக ஆயத்தம் செய்ய கீழே சென்றேன். அந்த கழுவுவதை அவர்கள் பார்த்து கொள்வார்கள் என்று பாஸ்டர் ஜான்தாமஸ் சொன்னார். உடலை கழுவுவதற்கு முன்பு ஷேவிங் பண்ணப்பட்டதா, அல்லது உடலை கழுவியதற்கு பின்பு ஷேவிங் பண்ணப்பட்டதா என்பதே தெரியாது. உடலில் யார் ஷேவ் பண்ணினார்கள் என்பதும் தெரியாது. பாஸ்டர் கனகராஜ் உடலை கடைசியாக பார்க்கும்போது, ஷேவ் பண்ணப்பட்டதால் காயம் ஏற்பட்டதாக நான் நினைத்து கொண்டேன். பொதுவாக அடக்கம் செய்வதற்கு முன்பு ஷேவ் செய்வது நடைமுறை என்பதால் அவ்வாறு நான் நினைத்தேன். இந்த விபரத்தை என்னை காவல்நிலையத்தில் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 1ம் எதிரி, பெண் ஊழியருடன் பிரச்சனை செய்தது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்,என்னிடம் சம்பவம் குறித்து எதுவும் சொன்னதில்லை. காவல்துறையின் விசாரணையின்போது, என்னையும், இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்த்துவிடுவோம் என்று சொன்னதால்தான், காவல்துறையினர் கேட்ட இடத்தில் எல்லாம் கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. காவல்துறையினர் கையெழுத்து போடுமாறு என்னிடம் கேட்கவில்லை. 1ம் எதிரி டைட்டஸை போன்று, அங்கு தங்கியிருந்தவர்கள் அனைவரையும் காவல்துறையினர் பலமுறை அழைத்து விசாரணை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். ஊழியக்காரர்கள் சிலரை, காவல்துறையினர் அடித்து துன்புறுத்திய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கிட்டத்தட்ட விசாரணை 1 1/2 வருடம் நடைபெற்றது என்றால் சரிதான். 2014 க்கும் முன்பும், பின்பும் வயோதிகத்தின் காரணமாகவும், தீர்க்க முடியாத வியாதிகளின் காரணமாகவும், அங்கே பணியில் இருக்கும் ஊழியர்கள் இறப்பது

வழக்கம் என்றால் சரிதான். பாஸ்டர் கனகராஜ்–ம் வயோதிகத்தின் காரணமாகவும், தோல் வியாதியின் காரணமாகவும் இறந்திருக்கிறார் என்றும், ஆனால் பணத்திற்காக ஆசைப்பட்டு, இறந்துபோன பாஸ்டர் கனகராஜின் உறவினர்கள் இயற்கை மரணத்தை, கொலை வழக்காக மாற்றி என்னை இந்த வழக்கில் சேர்த்து விடுவதாக சொல்லியதால், நான் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில், இறந்துபோன பாஸ்டர் கனகராஜை, செல்லப்பாண்டியன் என்ற தலை போதகரிடம் 1ம் எதிரி டைட்டஸ் தான் தான் கொலை செய்தேன் என்று சொல்லியுள்ளதாக சொல்லியுள்ள சாட்சியம் பற்றி அந்த விபரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. 1ம் எதிரி டைட்டஸ் சொன்ன தலைமை போதகர் சொல்லப்பாண்டியனும், வயோதிகத்தின் காரணமாகவும், உடல் உபாதைகளின் காரணமாகவும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதேபோன்று 2,3 எதிரிகள் என்னுடைய சபைக்குள் அன்று இரவு வந்ததை நான் உட்பட யாருமே பார்க்கவில்லை என்றால் சரிதான். மொத்தத்தில் கொலை செய்ததாக சொல்லும் சம்பவங்கள் எதையுமே நான் நேரடியாக பார்க்கவில்லை, கேள்விப்பட்டதுதான். போலீசார் கூப்பிட்ட நேரத்தில் போய் கையெழுத்து போட்டு வந்தேன் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை(அனுமதியுடன்)</u>

மில்லர்புரம் தலைமை சர்ச் அலுவலகத்தில் வெளி ஆட்கள் தங்குவதாக இருந்தால் தலைமை போதகரான பாஸ்டர் கனகராஜ் என்பவரின் அனுமதியின்பேரில்தான் தங்க முடியும்.

<u>மறுகுறுக்குவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | S.C.No. 304/2020 |
| Deposition of witness for | .. P.W.2 |
| Name | திரு. பிரபுஜான் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2022

முதல் விசாரணை

நான் தற்போது மாரமங்கலம் பெந்தேயகோஸ்து சபையில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன். 2016 ஆம் வருடம் தூத்துக்குடி மில்லர்புரம் பெந்தேயகோஸ் சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். எங்களது தலைமை சபையில் பாஸ்டர் கனகராஜ் என்பவர் தலைமை போதகராக இருந்தார். ஆஜர் எதிரிகளை தெரியும். முதலில் இருப்பவர் டைட்டஸ், 2 வது இருப்பர் அவரது தம்பி அண்டோ, 3 வது நிற்பவர் தம்பியின் நண்பர் ரகு ஆகியோர்கள் ஆவார்கள். 04.10.2016 ஆம் வருடத்தில், வருடாந்திர ஊழியக்கார கூட்டம் நடந்தது. தலைமை போதகரான பாஸ்டர் கனகராஜ் என்பவர்தான் அந்த கூட்டத்தை நடத்துவார். எங்கள் சபைக்கு கீழ் 23 சபைகள் உள்ளது. அந்த சபைகளில் உள்ளவர்கள் எல்லோரும் அந்த கூட்டத்திற்கு வருவார்கள். சுமார் 100 க்கு மேற்பட்ட ஊழியர்கள் அந்த கூட்டத்தில் பங்கு பெற்றனர். ஊழியர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குவார்கள். சில தவறுகள் செய்தால், அதனை சுட்டிக்காட்டி, அவர் திருந்துவதற்காக சில தண்டனைகளை வழங்குவார். பாஸ்டர் நேர்மையானவர், எளிமையானவர். சபையுடைய கோட்பாடுகளின்படி மிகவும் கண்டிப்பான நபர் ஆவார். அவர் ஊழியர்களுக்கு சில காரியங்களை சொல்லி கொண்டிருந்தார். அப்போது சில ஊழியர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றும், சரியாக ஜெபக்கூட்டத்திற்கு போகவில்லை என்றும்,சரியாக ஊழியங்கள் செய்யவதும் இல்லை என்பதாக புகார் வந்துள்ளதாகவும், அதற்கு பற்றி சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது தீர்க்கதரிசனம் ஒன்று வந்தது. அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும், தன் பிடாரியை கடினப்படுத்திகிறவன், சகாயமின்றி சடுதியில் நாசம் அடைவான் என்ற வார்த்தையை கொண்டு, சில காரியங்களை விளக்கி கொண்டிருந்தார். எவ்வளவோ கண்டித்தும், சில பேர் இருதயத்தை கடினப்படுத்துகிறார் என்று சொல்லும்போது, டைட்டஸ் (1 ம் எதிரி), சொர்ணராஜ், ராஜ், ஜான்தாமஸ்

ஆகியோர்களும் மற்றும் ஜேக்கப் ஆகியோர்கள் இந்த கூட்டத்தை விட்டு வெளியே போனார்கள். அப்போது நான் பேசியது சில பேர் இருதயத்தில் குத்தியதால் அவர்கள் வெளியேறி விட்டார்கள், என்னையும், லாரன்சையும் போய் அவர்களை அழைத்து கொண்டுவாருங்கள் என்று கூறினார். நானும், லாரன்சும் போய் அவர்களை அழைத்து கொண்டுவந்தோம். அப்போது சுமார் 2.15 மணி இருக்கும். அந்த கூட்டம் 2.45 மணிக்கு முடிந்தது. பிறகு அநேக ஊழியர்கள் மாதத்தில் ஒருமுறை வந்து பார்ப்பதினால், அவரிடத்தில் ஜெபித்து விட்டும், அவர்களுடைய தனிப்பட்ட காரியங்களையும், ஊழியக்காரியங்களையும் ஆலோசித்துவிட்டு செல்வது வழக்கம். அப்போது சபை ஊழியரான ஜேக்கப், பாஸ்டர் கனகராஜிடம் பேசிக்கொண்டிருந்தார். சகோதரிகளுடைய பேச்சை கேட்டு எங்களை கடுமையாக நடத்துகிறீர்கள் என்று சொன்னார். அதற்கு பாஸ்டர் கனகராஜ் அவர்கள், உங்களுடைய குறைகள் எதுவென்றாலும் என்னிடம் சொல்லவேண்டும், அப்படி இல்லாமல் இரும்புலியூருக்கு நேரடியாக சொல்லி விடுகிறீர்கள். அது என்ன உங்கள் மாமியார் வீடா என்று கேட்டவுடன், அவர் இருதயத்தில் துக்கப்பட்டு, சபை ஊழியர்கள் திருமணம் செய்யாமல் இருப்பதனால், இவ்வாறு கேட்டு விட்டீர்களே என்று கிளை சபையான குளத்தூருக்கு சென்றுவிட்டார். அன்று இரவு சுமார் 10.15 மணிக்கு உதவி தலைமை பாஸ்டர் ஜான் தாமஸ் அவர்களுக்கு டீ எடுத்துக்கொண்டு வெளியே வரும்போது, அப்போது தலைமை பாஸ்டர் கனகராஜ் அவர்கள் படுப்பதற்காக ஓலையால் வேயப்பட்ட மாடிக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது நான் மற்றும் ராஜதுரை, டைட்டஸ்(1ம் எதிரி) , ஜான்ஜோசப், லாரன்ஸ், ஆகியோர்கள் இரவு ஜெபத்திற்கு செல்லும்படி சொல்லிவிட்டு, அவர் மேலே போய் படுக்க சென்றுவிட்டார். நாங்கள் வழக்கம்போல், இரவு ஜெபத்தை முடித்துவிட்டு, இரவு 11.00 மணியளவில் கேட்டை பூட்டுவதற்காக நானும், லாரன்ஸ்–ம் போய் கொண்டிருந்தோம். பின் பக்க கேட்டை பூட்டுவதற்காக செல்லும்போது, அங்கு டைட்டஸ்(1ம் எதிரி) அவருடைய சகோதரர் அன்டோ (2ம் எதிரி), மற்றும் சகோதரனின் நண்பர் ரகு(3ம் எதிரி) ஆகியோர்கள் கேட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். லாரன்ஸ் கேட்டை பூட்டுவதற்கு செல்லும்போது, டைட்டஸ்(1ம் எதிரி) கேட் சாவியை வாங்கிகொண்டு நான் பூட்டிக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். லாரன்ஸ் சாவியை டைட்டஸிடம் கொடுத்துவிட்டு நாங்கள் படுப்பதற்கு வந்துவிட்டோம். இரவு சுமார் 12.00 லிருந்து 12.30 மணியளவில் நாய் சத்தம்போடுமளவில் ஒரு மரண ஓலம் கேட்டது. நான் என்னுடைய இருக்கையில் படுத்துவிட்டேன். காலை சுமார் 6.30 மணிலிருந்து 7.00 மணிக்குள் சகோதரர் லாரன்ஸ் என்பவர் என்னை எழுப்பினார். பதற்றத்துடன் கண்ணீருடன் பாஸ்டர், பாஸ்டர் என சொல்லி சீக்கிரமாக வா என்று சொல்லி, நானும், லாரன்ஸ்–ம் பாஸ்டர் கனகராஜ் படுத்திருந்த மாடியில் உள்ள ஓலை செட்டிற்க்கு சென்றோம். அப்போது பாஸ்டர் கனகராஜ் படுத்துக்கொண்டு, வலது கையை தலையில் வைத்துக்கொண்டும், இடது கையை மார்பில் வைத்துக்கொண்டும் ஒரு சைடு படுத்து கொண்டிருந்தார். அங்கு போட்டிருந்த கொசு வலை மேலே சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அவர்

அருகில் பேன் ஓடிக்கொண்டிருந்தது. வாயிலிருந்து இரத்தம் சிந்தி தலையணையில் சிந்தியிருந்தது. தலைமை பாஸ்டர் கனகராஜை தொட்டு பார்த்தேன். அவருடைய கை குளிர்ந்த நிலையில் உறைந்து காணப்பட்டது. நான், அருகில் இருந்த லாரன்ஸிடம் உதவி தலைமை பாஸ்டரை அழைத்து வா என்று கூறினேன். அவர் போய் அழைத்து வந்தார். அப்போது நான் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அவர் உடனே வந்து விட்டார். பாஸ்டர் கனகராஜிக்கு நாடிக்கு கீழே காயங்களும், கன்னத்தில் காயமும், வாயில் பற்கள் உடைக்கப்பட்ட காயங்களும் இருந்தது. அவருடைய சாரம் புதியதாகவும், அவர் அவருடைய தலையணை புதியதாகவும் இருந்தது. இரவில் அணிந்திருந்த சாரம் இல்லை. புதிய சாரத்துடன் கசங்காத நிலையில் படுத்து கொண்டிருந்தார். அப்போது சின்ன பாஸ்டர் ஜான்தாமஸ் வந்தார். அவர் உடனே மருத்துவரை அழைத்து வர போன் செய்தார். போன் எடுக்காததால், ஜான்ஜோசப் என்பவரை நேரில் அழைத்து வரும்படி சொன்னார். அவரும் மருத்துவரை அழைத்து வந்தார். மருத்துவர் அவரை பார்த்து பரிசோதித்து விட்டு சுமார் 6.00 மணிக்கு முன்னதாக இறந்திருப்பதாக கூறினார். அவர் இறந்ததால் அடக்க ஆராதனை செய்வதற்காக, அடுத்த தலைமை போதகர் உதவி தலைமை பாஸ்டர் ஜான் தாமஸ் அவர்கள், பிரதர் சொர்ணராஜ், டைட்டஸ்(1ம் எதிரி) ஆகியோர்களிடம் பாஸ்டர் கனகராஜ் உடலை சுத்தம் செய்ய சொன்னார். ஓஸ் தண்ணீர் டியூப்பை வைத்து பாஸ்டர் கனகராஜின் உடலை சுத்தம் செய்துவிட்டு, ஆராதனை கூட்டம் நடக்கும் இடத்திற்கு கொண்டு வந்து, மீட்டிங் ஹாலில் வைத்தார்கள். அப்போது அறிமுகமானவர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள் ஆகியோர்களுக்கு தகவல் சொல்லப்பட்டு, அன்றே அனைவரும் வந்துவிட்டார்கள். அவருடைய மரணம் சம்மந்தமாக அவர்களுக்கு சந்தேகம் வந்து விட்டது. அவரின் முகத்தில் ஏற்பட்டிருந்த காயங்கள், முகத்தோற்றங்கள் மாறியிருந்ததனால் அனைவருக்கும் சந்தேகம் வந்ததால், கொலை என்று பேச்சு அடிப்பட்டது. அவருடைய அடக்க ஆராதனை 6 ஆம் தேதி நடத்தப்பட்டது. இவருடைய மரணத்தில் சந்தேகம் உள்ளது, நாங்கள் பிரேத பரிசோதனைக்கு எடுத்து செல்ல போகிறோம் என்று பாஸ்டர் கனகராஜ் உறவினர்கள் சொன்னதால், இதனால் ஜான்தாமஸிக்கும், இறந்துபோன பாஸ்டர் கனகராஜ் அவர்கள் உறவினர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்கள் சிப்காட் காவல்நிலையத்திற்கு புகார் செய்து, போலீசார் வந்து, அவரது உடலை பிரேத பரிசோதனை செய்வதற்கு தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனை முடிந்து, மறுநாள் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. சுமார் ஒரு மாத காலம் கழித்து பாஸ்டர் கனகராஜ் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன். 08.10.2016 அன்று சிப்காட் காவல்நிலையத்தில் என்னை விசாரித்தார்கள். எனக்கு தெரிந்ததை போலீசாரிடம் சொன்னேன். கோரம்பள்ளம் என்ற சபையில் டைட்டஸ்(1ம் எதிரி) ஊழியம் பார்த்து கொண்டிருந்தார். அங்கு ஊழியம் செய்து கொண்டிருந்த சகோதரி ஜெனிட்டா என்பவரின் சேலை பிடித்து இழுத்ததாகவும், அதனை தலைமை பாஸ்டரிடம் சொன்னதாகவும், அதனால் கோபம் அடைந்த தலைமை

பாஸ்டர், அவரது உடைமைகளை தலைமையகத்துக்கு கொண்டுவரும்படி உத்தரவிட்டார். அதனால் டைட்டஸ் (1ம் எதிரி)ஐ தலைமை சபைக்கு வரச்சொல்லி, தண்டனைக்காக பாஸ்டர் கனகராஜ் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இருந்து தலைமை சபையில் இருந்தார். இவர் தண்டனையிலிருந்து இருந்ததால், திருவிருந்து கொடுக்கவில்லை. அவ்வப்போது விறகு ஒடிப்பது, சுத்தம் செய்வதும், தண்டனை நிமித்தமாக வேலைகளை செய்து வந்தார். திருந்துவதற்காக பாஸ்டர் கனகராஜ் கொடுத்தார். இதை பார்த்து மற்றவர்களும் திருந்துவதற்காக இந்த தண்டனைகளை கொடுப்பார். யாரேனும் தவறு செய்தால், நீயும் இதேபோல் தண்டனையை அனுபவிக்க போகிறாயா என்று சுட்டிக்காட்டுவார். அதனால் பாஸ்டர் கனகராஜியின் மேல், எதிரி டைட்டஸ்–க்கும் பகை இருந்து வந்தது. அப்போது மில்லர்புரம் சபையில் செல்வபாண்டி என்பவர் தலைமை பொறுப்பேற்றார். இந்த சூழ்நிலையில் சபையில் கொந்தளிப்பு ஏற்பட்டதால், பிரதர் டைட்டஸ்(1ம் எதிரி) என்பவரை நாசரேத் சபையிலும், பாஸ்டர் ஜான்தாமஸ் அவர்களை பாளையங்கோட்டை சபையிலும் இருக்கும்படி செய்தார். 14.12.2017 ஆம் தேதி டைட்டஸ்(1ம் எதிரி) என்பவர் பாவ அறிக்கை செய்வதற்காக, தலைமை பாஸ்டர் செல்வபாண்டியிடம் அழைத்து வர சொல்லியிருக்கிறார். அதன்படி ராஜதுரை, ராபின்சனும், நாசரேத் சபையில் சென்று பிரதர் டைட்டஸ்(1ம் எதிரி)ஐ மில்லர்புரம் சபைக்கு அழைத்து வந்தனர். அப்போது பாவ அறிக்கை செய்ததாகவும், தன் பாவங்களை மறைக்கிறவன், வாழ்வடையான், அதனை அறிக்கை செய்து விட்டுவிடுகிறான் என்ற வசனத்தின்படி பாவஅறிக்கையை தலைமை பாஸ்டர் செல்வபாண்டி அவர்களிடம் சொன்னார். பாவ அறிக்கையில், ஜெனிட்டா சிஸ்டர் இடத்தில் தவறாக நடக்க முயற்சி செய்ததாகவும், அதன்பேரில் அப்போது இருந்த பாஸ்டர் கனகராஜ் அவர்கள் என்னை தண்டித்து, ஊழியம் கொடுக்காமல், சபையிலேயே வைத்து விட்டார். நான் அவரிடத்தில் எவ்வளவு காரியம் சொல்லியும் எனக்கு எந்தவிதமான ஊழியமும் கொடுக்கவில்லை. இதனால் என்னுடைய தம்பியிடம் சொன்னதாகவும், தம்பி நான் பார்த்து கொள்கிறேன் என்று சொன்னதாகவும், வழக்கமாக நடக்கும் ஊழியர்கள் கூட்டத்தில், டைட்டஸ், டைட்டஸின் சகோதரரும், ரகு ஆகிய 3 பேர்களும், அப்போது இருந்த உதவி தலைமை பாஸ்டர் அவர்களிடம் சொன்னதாகவும், அதற்கு அவர் பாஸ்டர் கனகராஜ் இருக்கும் வரை சபை உருப்படாது, அவர் இறந்ததால்தான் சபை உருப்படும் என்றும், நீங்களும் ஊழியம் செய்யலாம் என்று சொன்னதாகவும், அடுத்த தலைமை பொறுப்பிற்கு நான் வருவதால் நான் எல்லாவற்றையும் பார்த்து கொள்கிறேன் என்று சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். அவர் சொன்ன வாக்குமூலத்தின்படி கொலை செய்ததாக கேள்விப்பட்டேன். அந்த வாக்குமூலத்தின்படி, அப்போதிருந்த பாஸ்டர் செல்வபாண்டி சிப்காட் காவல்நிலையத்தில் பிரதர் டைட்டஸை(1ம் எதிரி) ஒப்படைத்தாகவும் கேள்விப்பட்டேன். 1ம் எதிரி டைட்டஸ் சரணடைந்த பின்னர், என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம் நான் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் ஆகும். அதில் என்னுடைய

கையொப்பம் உள்ளது அது அ.சா.ஆ-2 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

சம்பவம் அன்று இறந்து கிடந்த பாஸ்டர் கனகராஜை முதலில் பார்த்தது அ.சா.1 லாரன்ஸ் என்றால் சரிதான். பாஸ்டர் கனகராஜை பார்க்கும்போது, கொசுவலையை மேலே லாரன்ஸ் கட்டியிருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. பாஸ்டர் கனகராஜ்க்கு, ரூமைசுத்தம் செய்வதும், துணியை அயனிங் செய்வதும், அவர் படுத்த இடத்தை சுத்தம் செய்வதும் அவர்தான் செய்வார். லாரன்ஸ்தான் கொசுவலையை கட்டினார் என்றோ, கட்டவில்லை என்றோ நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். பாஸ்டர் கனகராஜ் உடைய இறப்பில் எனக்கு என்று சந்தேகம் வந்தது என்றால் முதலில் பார்த்தவுடன் சந்தேகம் வந்தது. நான் உடனடியாக காவல்துறையிலோ, அவரது உறவினர்களிடமோ சொன்னேனா என்றால் நான் சபையில் சிறு ஊழியர்கள். அதனால் சொல்லவில்லை. உண்மையிலேயே ஒரு குற்றம் நடந்திருந்தாலும் , அல்லது அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பாஸ்டர் கனகராஜ் அவரை போன்று பல பாஸ்டர்கள், பல சிஸ்டர்கள் வயோதிகத்தாலும், வியாதிகளாலும் பலர் இறந்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த மரணங்களை பொறுத்தவரையில் வியாதிகள் இருந்தால் மருத்துவமனைக்கு செல்வதோ, மருந்துகள் சாப்பிடுவதோ கிடையாது என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக 08.10.2016 அன்று முதல்முதலில் காவல்நிலையம் சென்றேன். அன்று காவல்நிலையத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று ஞாபகமில்லை. கையெழுத்து போட்டுள்ளேன். என்னை படிக்க சொன்னார்கள். எத்தனை பக்கம் படித்தேன் என்று ஞாபகமில்லை. 15, 20 தடவை அவ்வப்போது கூப்பிடும்போதெல்லாம் செல்வேன். டைட்டஸ், லாரன்ஸ், நான், ஜேக்கப், காலேப், ராஜதுரை, சொர்ணராஜ் ஆகியோர்கள் காவல்நிலையத்தில் கூப்பிடும்போது காவல்நிலையம் போவோம். 08.10.2016 லிருந்து 3 மாதம் மட்டும்தான் விசாரித்தார்கள். அதன்பிறகு எங்களை விசாரிக்கவில்லை. அதன்பிறகு டைட்டஸ்(1ம் எதிரி)ஐ கைது செய்த பின்னர் கையொப்பம் வாங்கினார்கள். டைட்டஸ்க்கும், ஒரு பெண்ணுக்கும் பிரச்சனை என்பதை கேள்விப்பட்டேன், நேரடியாக தெரியாது. என்னுடைய 08.10.2016 அன்று விசாரணையின்போது, டைட்டஸ், ஊழியர் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தார் என்பதை காவல்துறையினரிடம் சொன்னேன். ஆனால் எழுதினார்களா என்று தெரியாது. 08.10.2016 அன்று விசாரணையின்போது, பின் கேட்டில் டைட்டஸின் சகோதரரும், நண்பரும் நிற்கிறார்கள் என்பதை சொன்னேன். ஆனால் எழுதினார்களா, இல்லை என்று எனக்கு தெரியாது. அந்த சபையில் வாட்ச்மேன் கிடையாது. சபை அங்கத்தினர், சபை அறிமுகமானவர்கள் யார் வேண்டுமானாலும் வரலாம். அது ஒரு வழிபாடு ஸ்தலம். 2015 ல் தூத்துக்குடி தலைமையகத்துக்கு ஊழியத்திற்கு வந்தேன். நான் வந்த கொஞ்ச நாட்களாக தலைமை பாஸ்டர் கனகராஜ் என்பவரை கவனித்து வந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு ஏற்கனவே கவனித்து வந்த

லாரன்ஸ் என்பவர் கவனித்து வந்தார் என்றால் சரிதான். நானும், டைட்டஸ் பிரதரும் நல்ல பிரண்டாக இருந்தீர்களா என்றால் எல்லோரும் போல் பழகினோம். அவர் தனி அறையில் இருப்பார். எனக்கும், லாரன்ஸ்க்கும் இடையே கைகலப்பு வந்ததால், டைட்டஸ் எனக்கு ஆதரவு தெரிவித்தார் என்று சொன்னால் தவறானது. லாரன்ஸ், என்னை தலைமை பாதரிடம் சொல்லி தவறான தகவல்களை சொல்லி, விறகு வெட்டுதல், பெருக்குதல் போன்ற வேலைகளை செய்ய சொன்னதாக சொன்னால் தவறு, எல்லோரும் எல்லா வேலைகளையும் செய்வோம். தண்டனை என்பது வற்புறுத்தி செய்ய சொல்வது. இதுபோல் என்னையும் வற்புறுத்தி செய்யசொன்னதால், நான் சென்னையிலிருந்து 2 நபர்களை கூட்டி வந்து, 04.10.2016 அன்று பிரபு, பிரவீன் என்பவரையும் கூட்டி வந்தேன் என்று சொன்னால் தவறு, அவர்கள்தான் வந்தார்கள். நான் கூட்டி வரவில்லை. அந்த 2 பேரும் சம்பவதினத்தன்று இரவு அங்குதான் தங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த 2 பேரும் மறுநாள் பாஸ்டர் உடல் இருக்கும்போது, அப்போதும் தூத்துக்குடியில்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த 2 பேரையும், எங்களுக்கு வேண்டிய ஒரு நபரை அனுப்பி, துறைமுகம், பீச், ே ஹாட்டலில் சாப்பாடு எல்லாம் ஏற்பாடு செய்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த நபர் பெயர் யாக்கோபு, இந்த சம்பவத்தை நான் போலீசார் விசாரணையின்போது சொன்னேன். 04.10.2016 நடைபெற்ற ஊழியர்கள் கூட்டத்தில், பாஸ்டர் கனகராஜ் பேசிய பேச்சில், சொர்ணராஜ், ராஜ், ஜேக்கப், ஜான்தாமஸ் ஆகியோர்கள் வெளியே சென்று விட்டார்கள். இந்த 4 பேரில் யாக்கோபு என்ற சகோதரர், பாஸ்டரிடம் பேசிக்கொண்டிருந்தார். இவ்வாறு பேசிக்கொண்டிருந்ததாக போலீசாரிடம் சொன்னேன். இறந்துபோன பாஸ்டர் கனகராஜின் அறையில், நான் போய் பார்க்கும்போது ரூம் கலைக்கப்படாமல், அவர் படுத்தநிலையில், பொருட்கள் சிந்தாமல், சிதறாமல் என்றால் சரிதான். இறந்துபோன பாஸ்டருக்கு தோல் சம்மந்தப்பட்ட வியாதி இருப்பதினால் முதுகை சொரிவதற்கு ஒரு கம்பு உண்டு. அவருக்கு மற்ற வியாதிகள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. அவர் காலில் ஒரு புண் உண்டு. ஊரல் இருப்பதால் சொரிவதற்கு கை போன்ற அமைப்புடைய குச்சி வைத்திருப்பார். இறந்துபோன பாஸ்டரை குளிப்பாட்டும்போது நான் அங்கே இல்லை. பாஸ்டர் கனகராஜை, சொர்ணராஜ், டைட்டஸ் குளிப்பாட்டும்போது நான் பார்த்தேன். பாஸ்டர் கனகராஜிக்கு முக சவரம் செய்ததை நான் பார்க்கவில்லை. பாஸ்டர் கனகராஜ் இறந்தபிறகு, அன்று மாலையே உறவினர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். இரவு நேரத்தில்தான் கொலை என்ற பேச்சு அடிப்பபட்டது. அந்த நேரத்தில் கொலையாளி டைட்டஸ்தான்(1ம் எதிரி) என்று யார் சொன்னார்கள் என்றால் என்னிடம் நேரடியாக யாரும் சொல்லவில்லை. பணம் எண்ணும்போது எனக்கு தெரியும். நான் உடன் இருக்கவில்லை. ஆனால் லட்சக்கணக்கில் பணம் இருந்ததாக சொன்னார்கள். பாஸ்டர் கனகராஜ் இறந்த சமயத்தில், இதயம் கனத்து சென்ற 4 பேர்களும் வந்திருந்தனர். என்னை பார்க்க வந்த 2 பேர்கள் அன்று மாலை சென்றுவிட்டார்கள். முந்தின நாள் இரவு கேட்ட சத்தம் மனித சத்தமா, மிருக

சத்தமா என்றால் ஒரு சத்தம் கேட்டது. அது மனித ஓலம் அல்ல. எங்களுடைய சபையில் மனநலம் பாதிக்கப்பட்ட திரு. ரகு என்பவர் இருந்தார் என்றால் சரிதான். பொதுவாக அவரை சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும் என்று சொல்வார்கள் என்றால் 2015 ஆம் ஆண்டு வந்தபிறகு வேலை செய்வார், அவரை கட்டி போட்ட விபரம் எனக்கு தெரியாது. பாஸ்டர் கனகராஜை அவர் தாக்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பாஸ்டர் கனகராஜ் இறந்தவுடன், வந்த மருத்துவர் அவரை பரிசோதனை செய்துவிட்டு, அவருடைய மரணம் இயற்கையானதுதான், ஹார்ட் அட்டாக்கில்தான் இறந்தார் என்று சொன்னார் என்றால் சரிதான். ஆனால் அவர் சர்ட்டிபிகேட் கொடுத்தவிபரம் எனக்கு தெரியாது. டைட்டஸ்(1ம் எதிரி), பாவ அறிக்கை செய்யும்போது, அந்த கேம்பஸ்–ல் இருந்தோம். ஆனால் அந்த ரூமில் நான் இல்லை. அந்த ரூமில் என்ன நடந்தது என்று தெரிந்தவர் செல்வபாண்டியன், ராஜதுரை ஆகியோர்களுக்குத்தான் தெரியும், ஆனால் நான் கேள்விப்பட்டேன். பாஸ்டர் கனகராஜ், என்னை பதவி இறக்கம் செய்துவிட்டார் என்பதால்தான், நான் வெளியிலிருந்து 2 பேரை கூட்டி வந்து கொலை செய்துவிட்டதாக சொன்னால் சரியல்ல. கடைசியாக காவல்நிலையத்திற்கு, டைட்டஸை கைது செய்தபின்னர் காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்று ஞாபகமில்லை. நான் 1 1/2 பக்கம், 2 பக்கம் படித்து பார்த்திருப்பேன். கையால் எழுதப்படவில்லை. நான் சொன்ன விபரம் இருந்ததாக நினைக்கிறேன். போலீசார், என்னை இந்த வழக்கில் குற்றவாளி கிடைக்காததால், என்னையும் சேர்த்துக்கொள்வேன் என்று சொல்லி மிரட்டி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள்தான் இந்த கொலையை செய்தார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவதன்று ஆஜர் எதிரிகள் 3 பேரும் பாஸ்டர் கனகராஜ் பக்கம் நின்றதை நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகள் 3 பேரும், பாஸ்டர் அறைபக்கமோ, நான் தங்கி இருக்கிற அறை பக்கமோ பார்க்கவில்லை. 11.00 மணிக்கு ஜெபம் முடிந்தது. அப்போது 3 பேர் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த கேட்டிற்கு நானும், ராஜதுரை–ம் தான் போனோம் என்று லாரன்ஸ் சொன்னால் நானும், லாரன்ஸ், போனோம் அங்கு ராஜதுரையும் நின்றார்.

மறுவிசாரணை(அனுமதியுடன்)

என்னை பார்க்க வந்த 2 நபர்களும் அவர்களாத்தான் வந்தார்கள். அவர்கள் இருவரும் தலைமை பாஸ்டர் கனகராஜ் அனுமதி பெற்றபிறகு, விசுவாசிகள் தங்கும் அறையில் தங்க சொல்லி, அவர்கள் அந்த இடத்தில் தங்கினார்கள்.

மறுகுறுக்குவிசாரணை (அனுமதியுடன்)

அவ்வாறு அந்த இடத்தில் தங்குவதற்கு எழுத்துபூர்வமான உத்தரவு எதுவும் இல்லை.

எழுத்துபூர்வமான உத்தரவு கொடுக்கும் வழக்கம் இல்லை. வாய்மொழியாக சொல்வதுதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 304/2020

Deposition of witness for .. P.W.3

| | |
|---|---|
| Name | திரு.ராஜதுரை |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2022

முதல் விசாரணை

நான் தற்போது எட்டையாபுரம் பெந்தேயகோஸ்து சபையில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன். 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் வருடம் வரை தூத்துக்குடி மில்லர்புரம் பெந்தேயகோஸ் சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்தேன். எங்களுடைய மில்லர்புரம் சபையில் பாஸ்டர் கனகராஜ் என்பவர் தலைமை போதகராக இருந்தார். ஆஜர் எதிரிகளை தெரியும். முதலாவது நிற்பவர் டைட்டஸ்(1 ம் எதிரி), 2 வது நிற்பவர் 1 வது எதிரியின் தம்பி அன்டோ(2 ம் எதிரி), 3 வது நிற்பவர் ரகு (3 ம் எதிரி) என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பாஸ்டர் கனகராஜ் மதகோட்பாடுகளில் தீவீரமாக இருப்பார். சபை ஒழுங்கு முறைகளில் கடினமாக இருப்பார். ஊழியர்கள் மீது பிரச்சனைகள் வந்தாலும், குற்றச்சாட்டுகளோ வந்தால் அவற்றிலிருந்து திருந்துவதற்காக சிறுசிறு தண்டனைகளை வழங்குவார். 2016 ஆம் வருடம் மே மாதம் ஜான் தாமஸ் என்பவர் இங்கு மாறி வந்தார். பாஸ்டர் கனகராஜ் இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பாக, டைட்டஸ் (1 ம் எதிரி) மீது கோரம்பள்ளம் சபையில் ஜெனிட்டா என்ற சிஸ்டரின் சேலையை பிடித்து இழுத்ததாக புகார் வந்ததால், அவரை தலைமை பாஸ்டர் கனகராஜ் அவர்களின் உத்தரவின்பேரில், மில்லர்புரம் சபையில் வந்து, அவரை தண்டனைக்காக இருக்க சொல்லி, கோரம்பள்ளத்திலிருந்து அவரது உடமைகளை நானும் சென்று எடுத்து வந்தேன். அப்போது நாங்களும் ஏதாவது தவறு செய்தால், நீங்களும் அவரை போல் தண்டனை அடைய வேண்டுமா என, எங்களை அவர் முன் எச்சரிப்பார். 04.10.2016 ஆம் தேதி மாதாந்திர ஊழியதாரர் கூட்டம் நடைபெற்றது. வழக்கம்போல அனைவரும் ஜெபம் செய்து கொண்டிருந்தோம். அப்போது பாஸ்டர் கனகராஜ், எல்லோரும் ஒழுங்காக ஜெபத்துக்கு போக வேண்டும் என்று அறிவுரை சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது சபையிலிருந்து சில பேர் வெளியில் சென்றுவிட்டார்கள். அதில் ராஜ், ஜேக்கப், ஜான் தாமஸ்

ஆகியோர்கள் வெளியே சென்றார்கள். வேறு சிலரும் சென்றார்கள். அவர்கள் பெயர் ஞாபகமில்லை. அப்போது பாஸ்டர் கனகராஜ், நான் சொன்ன வார்த்தை அவர்களுக்கு குத்தி விட்டது என்பதால், வெளியே சென்று விட்டார்கள், அவர்களை அழைத்து வாருங்கள் என்று அ.சா.1 லாரன்ஸ், அ.சா.2 பிரபு ஜானிடமும் சொன்னார். அவர்கள் சென்று அழைத்து கொண்டு வந்தார்கள். கூட்டம் முடியும்போது 2.45 மணி இருக்கும். பின்னர் மாலை சுமார் 6.00 மணியளவில் பாஸ்டர் கனகராஜிம், ஜேக்கப் என்பவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. 7.00 மணிக்கு மேல் ஜேக்கப் சென்றுவிட்டார். 10.15 மணிக்கு வெளியே நாங்கள் நின்றுகொண்டிருந்தபோது, பாஸ்டர் கனகராஜ் மாடியில் உள்ள ஓலை செட்டிற்கு போனார். அவ்வாறு போகும்போது, எல்லோரும் ஜெபத்திற்கு செல்லுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார். 10.00 லிருந்து 11.00 மணி ஜெபம் முடிந்தபின்னர், கேட்டுகளை பூட்டிவிட்டு படுக்க செல்வது வழக்கம். அப்போது லாரன்ஸ் கேட்டுகளை பூட்ட செல்லும்போது, 2 கேட்டையும் பூட்டிவிட்டு, பின் கேட்டை பூட்ட செல்லும்போது, 1ம் எதிரி டைட்டஸ் கேட்டை நான் பூட்டிக்கொள்கிறேன் என்று சாவியை வாங்கி கொண்டார். அவருடன் அவரது தம்பியும், மற்றொருவரும் நின்று பேசிக்கொண்டிருந்தார். அதன்பிறகு எங்கள் அறைக்கு சென்று துாங்க சென்றுவிட்டோம். மறுநாள் 4.00 மணிக்கு ஜெபத்திற்கு சென்றுவிட்டு, நாங்கள் எங்கள் அறைக்கு போய்விட்டோம். ஆனால் ஜெபக்கூட்டம் நடத்த தலைமை பாஸ்டர் வரவில்லை. 6.15 மணிக்கு மேல் அ.சா.1 லாரன்ஸ் பிரதர், பெரிய பாஸ்டர் மரித்துவிட்டார் என்று எங்களை வந்து எழுப்பினார். அப்போது நாங்கள் வந்து பார்க்கும்போது, சின்ன பாஸ்டர் இருந்தார் மற்றும் சில பிரதர்கள் இருந்தார்கள். வலது பக்கமாக சரிந்து படுத்திருந்தார். அவரது தாடை பகுதியில் சிறுசிறு காயங்கள் இருந்தது. சொல்லாம கொள்ளாமல் போய்விட்டாரே என்று சின்ன பாஸ்டர் ஜான்தாமஸ் புலம்பி கொண்டிருந்தார். ஜான்தாமஸ், இறந்த பாஸ்டர் கனகராஜின் உடலை சுத்தம் செய்வதற்காக 1ம் எதிரி டைட்டஸ் என்பவரையும் சொர்ணராஜ் என்பவரையும் சொன்னார். அவர்கள் ஓஸ் வைத்து கிளின் செய்தார்கள். கிளின் செய்த பாடியை ஜெபம் செய்வதற்காக மீட்டிங் ஹாலில் வைத்தார்கள். மறுநாள் காலையில் அடக்க ஆராதனை நடந்து கொண்டிருந்தது. பாஸ்டர் கனகராஜின் உறவினர்கள், சாவில் மர்மம் இருப்பதாக சொல்லி சின்ன பாஸ்டர் ஜான்தாமஸ் அவர்களிடம் சிப்காட் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். பின்னர் இறந்த பாஸ்டர் கனகராஜ் உடலை பிரேதபரிசோதனைக்காக துாத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மறுநாள் பிரேதபரிசோதனைக்கு பிறகு அடக்கம் செய்தார்கள். பிரேத பரிசோதனை முடிந்தபின்னர், எங்கள் எல்லோரையும் விசாரிக்க வந்தார்கள். அப்போது சந்தேகம் அதிகமாக சின்ன பாஸ்டர் ஜான்தாமஸ் மீதும், 1ம் எதிரி டைட்டஸ் மீதும் இருந்ததால், 1ம் எதிரி டைட்டஸை நாசரேத்திலும், ஜான்தாமஸை பாளையங்கோட்டை சபைக்கும் மாற்றம் செய்யப்பட்டனர். பின்னர் ஒரு வருடம் வரையில் விசாரணைக்காக காவல்நிலையம் சென்றுவந்தோம். 14.12.2017 ஆம் தேதி அப்போதைய தலைமை பாஸ்டர் செல்வபாண்டி அவர்கள், என்னையும்,

விசுவாசியான தெர்மல்நகரை சேர்ந்த ஜெயராபினையும் அழைத்துக்கொண்டு, வண்டி எடுத்து சென்று டைட்டஸை நாசரேத் சென்று அழைத்து வரச்சொன்னார். அதன்படி நாங்கள் இருவரும் சென்று டைட்டஸை அழைத்து கொண்டு வந்தோம். வந்தவுடன் பாஸ்டரை பார்த்து பேச ஆரம்பித்தார். பைபிளில் உள்ள நீதிமொழி வசனமான, தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அறிக்கை செய்து விட்டுவிடுகிறவன் இரக்கம் பெறுவான் ,என்ற வசனத்தை ஆண்டவர் பேசியதாக சொல்லி, பாஸ்டர் கனகராஜை கொலை செய்த விவரத்தையும், யார் யாரெல்லாம் எவ்வாறு கொலை செய்தோம் என்ற விபரத்தையும், பாஸ்டர் செல்வபாண்டியிடம் வாக்குமூலம் கொடுத்தார். அதை டைட்டஸ் (1ம் எதிரி) சொல்ல சொல்ல செல்வபாண்டி பாஸ்டர் கைப்பட எழுதினார். அப்போது நான் உடனிருந்ததால் மேற்படி விபரங்கள் எனக்கு தெரியும். அந்த 1ம் எதிரி சொன்ன விவரங்களை எழுதிக்கொண்ட செல்வபாண்டி பாஸ்டர் தற்போது உயிருடன் இல்லை. இறந்துபோன பாஸ்டர் செல்வபாண்டி உடைய கையெழுத்துக்கள் எனக்கு நன்கு பரிட்சையமானவை. அதனால் அந்த ஆவணத்தை என்னிடம் காட்டினால் கையெழுத்துக்களைப்பற்றி சொல்ல முடியும். அவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்யும்போது நான் உடனிருந்தேன். அந்த வாக்குமூலத்தில், அவர் தான் 1ம் எதிரி டைட்டஸ் கைகளை பிடித்துக்கொண்டதாகவும், அவரது தம்பி 2 கால்களையும் பிடித்து கொண்டதாகவும், தம்பியின் நண்பர் ரகு தலையணையை கொண்டு பாஸ்டரின் மூக்கில் அமுக்கியதாகவும், பாஸ்டர் கனகராஜ் சத்தம்போட்டதால், நான்தான் கழுத்தை நெறித்து பாஸ்டரை கொலை செய்ததாகவும் ஒப்புக்கொண்டார். அதனை கைப்பட எழுதினார். பின்னர் நானும், பாஸ்டர் செல்பாண்டியும், டைட்டஸ்(1ம் எதிரி) என்பவரை அழைத்துக்கொண்டு சிப்காட் காவல்நிலையம் சென்றோம். இது தொடர்பாக நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். அந்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது அ.சா.ஆ–3 ஆகும். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

(இந்நிலையில் அரசுதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி முதல்விசாரணையானது, அரசுதரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய பகுதியாக நிறுத்தம் செய்யப்படுகிறது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.